**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ஆம் நாள் திங்கள்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு ஆனி திங்கள் 15 ம் நாள்**
**அசல் வழக்குஎண்.124/2024**
**CNR.NO.TNAL05-000192-2024**

1. சிவப்பிரகாசம், வயது 62/2024,
த/பெ. தங்கவேல்,
2. குணச்செல்வி, வயது 53/2024,
க/பெ. லேட் ராஜேந்திரன்,
மேற்படி 1, 2 வாதிகள்,
காடுவெட்டி படநிலை கிராமம்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். ...வாதிகள்

//எதிர்//

1. சிலம்பரசன், வயது 30/2024,
த/பெ. சந்திரசேகர்,
2. நிர்மல்குமார், வயது 29/2024,
த/பெ. செல்வகுமார்,
மேற்படி 1, 2 பிரதிவாதிகள்,
காடுவெட்டி படநிலை கிராமம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ...பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 25.10.2024, 16.11.2024. |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 19.11.2024. |
| வியாஜ்ஜிய மூலம் | : | 25.07.1986, 10.12.2023, 30.09.2024, காடுவெட்டி படநிலை கிராமம், பாப்பாகுடி வடக்கு வருவாய் மதுரா, உடையார்பாளையம் தாலுக்கா. |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | ரூ.1,000/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | ரூ.74/- |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | ரூ.30/- |
| மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் | : | ரூ.44/- |

நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு : 27(c) of TNCF Act

தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையூறு செய்யாமல் இருக்க பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டும் என்று வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக கடந்த 06.06.2026–ம் தேதியன்று வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சிங்காரவேலன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிய அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்டும், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்பாணை</u>**

1. வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு,
2. தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்படுகிறது.
3. வாதிகளின் வழக்கு செலவுத்தொகை ரூ.760/–ஐ 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**<u>செலவுத்தொகை விபரம் வாதிகள் தரப்பில்</u>**

| வ.எண் | விபரம் | வாதி<br>ரூ. பை |
|---|---|---|
| 1. | பிராது ஸ்டாம்பு | 30.00 |
| 2. | வக்காலத்து | 10.00 |
| 3. | சம்மன் படி | 20.00 |
| 4. | பிராது தயாரிப்பு செலவு | 200.00 |

| | | |
|---|---|---|
| 5. | வழக்கறிஞர் கட்டணம் | 500.00 |
| | கூடுதல் | 760/- |

(பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>தாவா சொத்துவிபரம்</u>**

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் தாலுக்கா, பாப்பாகுடி (வடக்கு) கிராம (1ம் வாதியின் பாக) தாவா சொத்து.

1. அசல் புஞ்சை புல எண்.69/1ல் 2.32ல் "நடுவில் ராஜேந்திரன் பாகத்திற்கு (கிழக்கு), (தெற்கு), சிவப்பிரகாசம் நிலத்திற்கு (வடக்கு), சந்திரசேகரன் நிலத்திற்கு (மேற்கு)" இதில் 46 செண்டு. அதே நான்கெல்லையில் புல எண்.69/3A ல் 03 செண்டு ஆக கூடுதல் 49 செண்டு.
2. புல எண்.65/9ல் 2.96ல் "ராஜேந்திரன் பாகத்திற்கு (கிழக்கு), ராசாங்கம் நிலத்திற்கு (தெற்கு), சந்திரசேகர் நிலத்திற்கு (மேற்கு), சிவப்பிரகாசம், ராஜேந்திரன் நிலத்திற்கு (வடக்கு)" இதில் 90 செண்டு.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, பாப்பாகுடி (வடக்கு), கிராம (2ம் வாதியின்) தாவா சொத்து.

3. அசல் புஞ்சை சர்வே எண்.69/1ல் 2.32 "மேல்புறம் சுப்பையன் ராதாகிருஷ்ணன் நிலத்திற்கு (கிழக்கு), ராஜேந்திரன் பாகத்திற்கு (தெற்கு), (வடக்கு), சிவப்பிரகாசம் நிலத்திற்கு (மேற்கு) இதில் ஏ 0.29 செண்டு.
4. புல எண்.69/2ல் 0.65ல் "ராஜேந்திரன் பாகத்திற்கு (தெற்கு), சிவப்பிரகாசம் பாகத்திற்கு (மேற்கு), ராதாகிருஷ்ணன் நிலத்திற்கு (வடக்கு), மற்றும் கிழக்கு" இதில் 20 செண்ட்.
5. புல எண்.65/9ல் 2.96ல் மேல்புறம் "ராசாங்கம் நிலத்திற்கு (தெற்கு), சக்ரபாணி, சுப்பையன் நிலத்திற்கு (கிழக்கு), ராஜேந்திரன் பாகத்திற்கு (வடக்கு), சிவப்பிரகாசம் பாகத்திற்கு (மேற்கு)" இதில் 90 செண்ட்.

இத்தீர்ப்பாணையானது 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 29-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்/-திரு.ம.சி.கண்ணதாசன்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.